# அருப்புக்கோட்டை நகராட்சி

## நகர்மன்ற அவசரக்கூட்டப்பொருள்

நிகழும் திருவள்ளுவராண்டு 2054 சோபகிருது வருடம் ஆவணி மாதம் 12ம் நாள் 2023ம் ஆண்டு 29.08.2023ம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் அருப்புக்கோட்டை நகர்மன்ற கூட்ட மண்டபத்தில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் கீழ்க்கண்ட பொருட்கள் மன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கெள்ளப்படும்

(ஓம்)திரு.சி.சுந்தரலட்சுமி

இடம்: அருப்புக்கோட்டை நகர்மன்றத்தலைவர்

நாள்: 28.08.2023 அருப்புக்கோட்டை நகராட்சி

பொருள்1: ஆணையாளர் அவர்களது ஆகஸ்ட் 2023 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்: 710

பதிவு செய்யப்பட்டது

பொருள்2: நகராட்சி பொறியாளர் அவர்களது ஆகஸ்ட் 2023 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்: 711

பதிவு செய்யப்பட்டது

பொருள்3: பிறப்பு இறப்பு விவரம் கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்டவை

| | ஆகஸ்ட் 2023 |
|---|---|
| பிறப்பு | 60 |
| இறப்பு | 58 |
| இறந்து பிறந்தவை | 0 |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

பதிவு செய்யலாம்

தீர்மான எண்: 712

பதிவு செய்யப்பட்டது

பொருள்4: நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.12091/23/எம்ஏ2 நாள் 09.08.2023ன்படி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 மற்றும் விதிகள் 2023 குறித்த பயிலரங்கம் 22.06.2023 அன்று கலைவாணர் அரங்கில் நடத்தப்பட்டதற்கு உண்டான வாடகை, மேடை அலங்காலம், சிற்றுண்டி மற்றும் உணவு

வழங்கப்பட்டதற்கு உண்டான செலவுத் தொகை ரூ.3021821/-ல் இந்நகராட்சிக்குரிய பங்குத்தொகையினை செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3817-1/2023/சி1

**தீர்மான எண்: 713**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்5:** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 8, காரியம் தனுஷ்கோடி கடை எண் 10க்கு மாத வாடகை அடிப்படையில் குத்தகை உரிமம் அனுபவித்துக்கொள்ள 02.08.2023 அன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதிதல் இரண்டு ஏலக்கேள்விகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஏலக்கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | சு.சிவசங்கரன் | ரூ.2500/- |
| 2 | P.உமா | ரூ.2400/- |

வரப்பெற்ற இரண்டு ஏலக்கேள்விகளில் திரு.சு.சிவசங்கரன் என்பவரின் ஏலக்கேள்வி அதிகமாக உள்ளது. மேற்படி ஏலக்கேள்வியினை ஏற்க மன்ற்த்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.5138/2012/அ1

**தீர்மான எண்: 714**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்6:** வருவாய் நிதி 2023-24ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி பந்தல்குடி ரோடு (அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம்) புதியதாக கடைகள் கட்டும் பணி (தரைதளம் (3) + மற்றும் முதல் தளம் (3) ) (3+3=6) மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.28.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 484, நாள் 31.03.2023 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 10.08.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.P.மலைச்சாமி ஒப்பந்ததாரர் | 0.06% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |
| 2. | திருமதி.P.ராமசந்திரன் | 3.49% மதிப்பீட்டு |

ஒப்பந்ததாரர் தொகையைவிட அதிகமாக

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.06% குறைவாக கொடுத்துள்ள திரு.P.மலைச்சாமி அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.799/2023/இ1

தீர்மான எண்: 715

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்7: அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 36 சுப்புராஜ் நகர் 12வது தெரு, சுப்புராஜ் நகர் மெயின் குறுக்குத்தெரு (தென்வடல்), சுப்பராஜ் நகர் 13வது தெரு, சுப்புராஜ் நகர் 14வது தெரு, சுப்புராஜ் நகர் விரிவாக்கப்பகுதி ஆகிய பகுதிகளில் சாலை வசதிகள் இல்லாததால் சாலை வசதி செய்துதருமாறு பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைவைத்ததன்அடிப்படையில், நகர்மன்றத்தலைவர் அவர்களது நேரடி அறிவுரையின்படியும் மேற்படி வார்டு எண் 36 பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.50.00 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4633/2023/இ1

தீர்மான எண்: 716

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்8: அருப்புக்கோட்டை நரகாட்சி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு 2022-2023ம் நிதியாண்டிற்கான வருமானவரி தொகை செலுத்தி உரிய முறையில் கணினியில் தாக்கல் செய்த வகைக்கு ரூ.18000/- வழங்க கோரி தணிக்கையாளர் திரு.M.குமாரசாமி அவர்கள் கேட்பு சமர்பித்துள்ளார். மேற்படி கேட்புத்தொகையை வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க.எண்.2983/2017/பி2

தீர்மான எண்: 717

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்9: அரசாணை நிலை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007ன் படி அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட விபரப்படி உள்ள கடைக்கு மூன்றாண்டு காலம் முடிவடைவதால் ஏற்கனவே உள்ள வாடகை மதிப்பிலிருந்து 15சதவீதம் உயர்வு செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு உரிமத்தை புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வரிவிதிப்பு எண் | கடை எண் | குத்தகைதாரர் பெயர் | உரிமம் முடிவடையும் தேதி | ஏற்கனவே உள்ள மாத வாடகை | உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை (15 சதவீதம்) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **அண்ணாசிலை கடைகள்** | | | | | | | |
| 1 | 126/BD01/00015 | **கடை எண்** 3 | K.நாகராஜன் | 31.08.2023 | 920 | 138 | 1058 |

**அலுவலககுறிப்பு:-**

1. அரசாணை (நிலை) எண் 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி மேற்கண்ட மூன்றாண்டு முடிவுற்ற கடைகளுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகை 15% (பதினைந்து சதவீதம்) உயர்த்தி வசூலிக்கவும் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் வசூலிக்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட கடையின் உரிமதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு உரிய தேதியில் புதுப்பித்தல் கட்டணம் மற்றும் 15% உயர்த்தப்பட்ட தொகையினை செலுத்தத் தவறினால் கடையினை மறுஏலம் விடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.11271/2018/அ1

**தீர்மான எண்: 718**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்10: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் தனியார்மயம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ள விதிக்கப்பட்ட அரசாணையின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/2016/ஜே2, நாள் 26.10.2017ல் அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s.Malar Clean and Green PVT Ltd., தனியார் நிறுவனத்தின் மூலம் 10 பணியாளரை கொண்டு மேற்படி பள்ளிகளுக்கு சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தது. மேற்படி தனியார் நிறுவனத்திற்கு இந்நகர்மன்ற முன்அனுமதி நாள் 07.02.2023ன்படி இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.9624/2017/எச்1, நாள் 07.02.2023ன்படி 01.02.2023 முதல் 30.04.2023 முடிய மேற்படி சுகாதார பணிகளை மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவு 30.04.2023 உடன் முடிவடைய உள்ளதாலும் மேலும் M/s.Malar Clean and Green PVT Ltd., தனியார் நிறுவனம் பள்ளி சுகாதாரப்பணியினை தானே பார்த்து வர விருப்பம் தெரிவித்துள்ளது. தற்பொழுது டெங்கு நோய் பரவிவரும் சூழ்நிலையில் பள்ளி மாணவர்களின் சுகாதாரம் மற்றும் அத்தியாவசியத்தினை கருதி 10 தூய்மை பணியாளர்களை கொண்டு 2022-23 ஆண்டு தினசரி ஊதிய விலைவிகிதத்தில் 01.05.2023 முதல் 31.07.2023 முடிய தற்காலிக மூன்று மாதத்திற்கு ஒரு முறை புதுப்பித்து வழங்கவும் அதற்குரிய செலவுத்தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

ஏற்கனவே பணிபுரிந்து வரும் பணிகாலம் 30.04.2023ம் தேதியுடன் முடிவடைந்தது. தற்சமயம் 01.05.2023 முதல் பார்த்து வரும் பணிக்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.9624/2015/எச்1

**தீர்மான எண்: 719**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்11: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் தனியார்மயம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ள விதிக்கப்பட்ட அரசாணையின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/2016/ஜே2, நாள் 26.10.2017ல் அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s.Malar Clean and Green PVT Ltd., தனியார் நிறுவனத்தின் மூலம் 10 பணியாளரை கொண்டு மேற்படி பள்ளிகளுக்கு சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி தனியார் நிறுவனத்திற்கு இந்நகர்மன்ற முன்அனுமதி நாள் 26.04.2023ன்படி இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.9624/2017/எச்1, நாள் 26.04.2023 மூலம் 01.05.2023 முதல் 31.0.72023 முடிய மேற்படி சுகாதார பணிகளை மேற்ளொள்ள உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவு 31.07.2023 உடன் முடிவடைய உள்ளதாலும் மேலும் M/s.Malar Clean and Green PVT Ltd., தனியார் நிறுவனம் பள்ளிசுகாதாரப்பணியினை தானே பார்த்து வர விருப்பம் தெரிவித்துள்ளது. தற்பொழுது டெங்கு நோய் பரவிவரும் சூழ்நிலையில் பள்ளி மாணவர்களின் சுகாதாரம் மற்றும் அத்தியாவசியத்தினை கருதி 10 தூய்மை பணியாளர்களை கொண்டு 2022-2023 ஆண்டு தினசரி ஊதிய விலைவிகிதத்தில் 01.08.2023 முதல் 31.10.2023 முடிய தற்காலிகமாக மூன்று மாதத்திற்கு ஒரு முறை புதுப்பித்து வழங்கவும் அதற்குரிய செலவுத்தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

ஏற்கனவே பணிபுரிந்து வரும் பணிகாலம் 31.07.2023ம் தேதியுடன் முடிவடைந்தது. தற்சமயம் 01.08.2023 முதல் பார்த்து வரும் பணிக்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி முன் அனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.9624/2015/எச்1

தீர்மான எண்: 720

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்12: அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 17, கதவு எண்கள் 15(1), 15(2) வரிவிதிப்பு எண்கள் 126/21873, 126/21874 மலையரசன் கோவில் கிழமேல் தெருவில் உள்ள கட்டிடத்திற்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்ததை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு எண் WP (MD) No.13761/2014 மற்றும் WP (MD) No.16278/2014 ஆகிய இரு வழக்கிற்கும் 15.03.2023 அன்று உயர் நீதிமன்றம் மதுரை கிளையின் தீர்ப்பாணையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பாணையில் 28.07.2023ம் தேதியில் இந்நகராட்சியின் உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் வழக்கறிஞர் திரு.என்.திலீப்குமார் அவர்கள் இந்நகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராவதற்கும் வழக்கு எண் WP (MD) No.13761/2014 வழக்கிற்கு ரூ.9500/- மற்றும் WP (MD) No.16278/2014 வழக்கிற்கு ரூ.9500/- ஆக மொத்தம் செலவினத்தொகை ரூ.19,000/-ஐ திரு.திலீப்குமார் வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க.எண்.130/23/அ2

தீர்மான எண்: 721

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்13 : இந்நகராட்சியை எதிர்த்து திரு.மா.முத்து, உதவி செயற்பொறியாளர் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றம், மதுரை பலகையில், தான் அருப்புக்கோட்டை நகராட்சியில் பணிபுரிந்த காலத்தில் 02.04.2018 அன்று லஞ்ச ஒழிப்பு துறையினரால் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டது சம்பந்தமாக 05.06.2018ம் தேதியில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேள்வி கேட்டுள்ளதன் பேரில் (சிசிடிவி கேமிரா சம்பந்தமாக) வழக்கு எண் டபிள்யூ.பி(எம்டி) நம்பர் 19734/2022 நாள் 24.08.2022ல் வழக்கு தொடர்ந்த வகையில் அதனை நகராட்சியின் சார்பில் வழக்காடுவதற்கு திரு.ஏ.பாஸ்கரன், அரசு கூடுதல் வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்குக் கட்டணமாக ரூ.9500/-னை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.5573/2018/சி1

தீர்மான எண்: 722

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்14 : அருப்புக்கோட்டை நகராட்சி சுகாதாரபிரிவு நகரில் உற்பத்தியாகும் குப்பைகளில் தரம் பிரித்து எம்சிசி கொண்டு சென்றது போக பிரிக்க முடியாத குப்பைகளில் சுமார் 5 டன் (ஒரு நாளைக்கு) கொண்டு குப்பைகளை கலவை உரக்கிடங்கில் உள்ள Processing Unit மூலம் தரம்பிரிக்கும் பணி நடைபெற்று வந்தது. அதனை தொடர்ந்து கலவை உரக்கிடங்கில் Bio Mining நடைபெற்றதால் Processing Unit பணி நிறுத்தப்பட்டது. Processing Unit பணி நிறுத்தப்பட்டதால் அன்றாடம் சேகரமாகும் குப்பைகளை மனிதர்களால் தரம்பிரிக்க முடியாத அளவு அதிகரித்துக்கொண்டே இருக்கும் சூழ்நிலை உள்ளது. மேற்படி உரக்கிடங்கிறகு 01.08.2023 அன்று மாவட்ட ஆட்சியர் நேரடி ஆய்வின் போது அன்றாட சேகரமாகும் குப்பைகளை தரம்பரிக்கும் Processing Unit மறுபடியும் மீண்டும் தொடர்ந்து இயக்கி குப்பைகளை தரம்பிரித்து வின்ரோஸ் முறையில் உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரின் நேரடி வாய்மொழி உத்தரவின் பேரில் கீழ்கண்ட விபரப்படி பணிகள் மேற்கொள்வது.

| | |
|---|---|
| அன்றாடம் சேகரமாகும் குப்பைகளில் அளவு சுமார் | - 5டன் |
| தரம்பிரிக்கும் பணிக்கு தேவையான பணியாளர்களின் எண்ணிக்கை | - 10 நபர்கள் |
| JCB இயந்திரம் | - 1 |

தொழிலாளர் நலவாரிய அரசாணை 36(2டி), நாள் 16.06.2023ன்படி தினக்கூலி அடிப்படையில் நகராட்சியில் துப்புரவு பணியாளர் என்கிற பெயரில் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி Unskilled என்கின்ற தலைப்பில் நாள் ஒன்றுக்கு ரூ.385/- வீதம் மாதம் ரூ.10,000/- வரை என குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஒரு நாள் ஊதியம் | - | ரூ.385.00/- |
| EPF (13%) | - | ரூ. 50.00/- |
| ESI (3.25%) | - | ரூ. 13.00/- |
| நிர்வாக செலவு (5%) | - | ரூ. 19.00/- |
| மொத்தம் | - | ரூ.467.00/- |

**மேற்கண்ட கணக்கீட்டின்படி நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.**467/- **வீதம்** 10 **நபர்களுக்கு** 1 **நாளைக்கு ரூ.**4670/- 30 **நாட்களுக்கு ரூ.**1,40,100/- **ஆகிறது. அது போல் JCB இயந்திரம்** 1 **மணிநேரம் இயக்குவதற்கு தோராயமாக ரூ.**950/- (8 **மணி நேரம்) ஒரு நாளைக்கு ரூ.**7600/- 30 **நாட்களுக்கு ரூ.**2,28,000/- **ஆகிறது.**

**எனவே மேற்கண்ட தொகை செலவினத்திற்கும் இப்பணியானது மாவட்ட ஆட்சியரின் நேரடி வாய்மொழி உத்தரவின்படி ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் Processing Unit மூலம் தரம்பிரிக்கும் பணி மேற்கொள்வதற்கு (வெளிகெணர்வு மூலம்) டெண்டர் கோர நகர்மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.**

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

**மன்றம் அனுமதிக்கலாம்** **ந.க.எண்.**4353/2023/**எச்1**

**தீர்மான எண்: 723**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்**15 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான திருப்புவனம் தலைமை நீரேற்றுநிலையம், கட்டங்குடி நீருந்து நிலையம், மதுரை ரோடு மேல்நிலை நீர்தேக்க தொட்டி, அலுவலக வளாகத்தில் உள்ள ஜெனரேட்டர்கள் பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தம் பெறப்பட்டுள்ளது. அதில் ஜெனரேட்டர் பழுது பணியினை சரிசெய்வதற்கு மட்டும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. உதிரிபாகங்கள் வாங்கி பொருத்த வழிவகை செய்யப்படவில்லை. எனவே திருப்புவனம் தலைமை நீரேற்றுநிலையம், கட்டங்குடி நீருந்து நிலையம், மதுரை ரோடு மேல்நிலை நீர்தேக்க தொட்டி, அலுவலக வளாகத்தில் உள்ள ஜெனரேட்டர்களுக்கு தேவையான உதிரிபாகங்கள் வாங்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1.30 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

**மன்றம் அனுமதிக்கலாம்.** **ந.க.எண்.**4749/2023/**இ1**

**தீர்மான எண்: 724**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்**16 : அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதார பிரிவு, திடகழிவு மேலாண்மை திட்டத்தின்படி வீடுகளில் உருவாகும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனிதனியாக பிரித்து தூய்மை பணியாளர்களிடம் கொடுக்கும் வகையில் ஏற்கனவே முதல் கட்டமாக 09,12,14,19,22 மற்றும் 34 ஆகிய வார்டுகளுக்கு நகராட்சியின் சார்பாக அனைத்து வீடுகளுக்கும் பச்சை மற்றும் ஊதா குப்பை கூடைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக இரண்டாவது கட்டமாக மீதம் உள்ள வார்டுகளான 1,5,8,12,21,30 மற்றும் 33 ஆகிய வார்டுகளில் உள்ள மொத்த வீடுகள் எண்ணிக்கை 5730 மேற்குறிப்பிட்ட வார்டுகளின் ஒவ்வொரு வீட்டிற்கும் மக்கும் குப்பை பெறுவதற்கு பச்சைகலர் – 5730 குப்பை கூடைகள் (சிறியளவு) மற்றும் மக்காத குப்பை பெறுவதற்கு நீலக்கலர் – 5730 குப்பை கூடைகள் (சிறியளவு) ஆக மொத்தம் 11460 சிறியளவு குப்பை கூடைகள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.8.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u> :-

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க.எண்.4701/2023/எச்1

**தீர்மான எண்: 725**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்**17 : அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு D, பிளாக் 4 S.S.P. தெருவில் நகரளவை எண் 70, 79 மற்றும் 80 கொண்ட இடத்தில் பொது சந்திலும் மற்றும் வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்திலும் கட்டுமானங்களை கட்டியது தொடர்பாக வி.ஜீவரத்தினம் என்பவரால் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு எண் O.S.No.62/2023ல் இந்நகராட்சி ஆணையாளரை 4ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக திரு.A.பாஸ்கரன் BSC., BL., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u> :-

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.4520/2023/எப்1

**தீர்மான எண்: 726**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்**18 : அருப்புக்கோட்டை நகராட்சியில் கேங்கூலியாகப் பணிபுரிந்து 31.07.2022 அன்று ஓய்வு பெற்ற திரு.எல்.கருப்பசாமி என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் WP(MD) No.9702/2023க்கு நகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரானதற்கும் மற்றும் வாதாடியதற்கும் செலவினத்தொகை வழக்கு ஒன்றிற்கு ரூ.9,500/-ஐ திரு.N.திலிப்குமார், வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:-

மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க.எண்.4418/2022/பி3

**தீர்மான எண்: 727**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்**19 :அருப்புக்கோட்டை நகராட்சிக்கு 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு 20 எண்ணம் LCV வாகனங்கள் M/s.Sakthi Body Works, Chennai நிறுவனம் மூலம் வாங்குவதற்கு 20.06.2023 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு. தற்பொழுது வரை 10 எண்ணம் LCV வாகனங்கள் நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியில் LCV வாகனம் வாங்குவதற்கு மட்டுமே வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து வாங்கனங்களுக்கான Insurance, life tax & Permanent Registration fees, FC Fees, Reflection sticker fees & others RTO Charges ஆகியவற்றிற்கான செலவீனங்கள் மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத்தொகையில் வழிவகை இல்லை என்பதால் மேற்படி பணிக்கான செலவீனத்தொகை ரூ.9,84,000/-யை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

**மன்றம் அனுமதிக்கலாம்.** **ந.க.எண்.**1056/2023/**இ**1

**தீர்மான எண்: 728**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்**20 :அருப்புக்கோட்டை நகராட்சி நகரளவை எண் 209/2 மற்றும் 209/3ல் அமைந்துள்ள ஸ்ரீ அருள்மிகு சீரடி சாய்பாபா கோவில் இடம் தொடர்பாக ஸ்ரீசீரடி சாய்பாபா கோவில் வணங்குபவர்களில் ஒருவரான T.R.V.ராம்குமார் மூலம் மற்றும் ஒருவரால் முதன்மை மாவட்ட நீதிமன்ற வழக்கு எண் O.S.No.54/2023ல் இந்நகராட்சி ஆணையாளரை 12ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக A.பாஸ்கரன்BSC., BL., வழக்கறிஞர் அவர்கள் ஆஜராவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

**மன்றம் அனுமதிக்கலாம்.** **ந.க.எண்.**4066/2023/**எப்**1

**தீர்மான எண்: 729**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்**21 : அருப்புக்கோட்டை நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு அரசாணை (நிலை) எண் 93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி-2) நாள் 12.07.2023 வாயிலாக 364.00 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளதின் பேரில், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை (TNUIFSL) மூலம் திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு 297.25 கோடிக்கு இத்திட்டத்திற்கான நிதி இயலுமைத்தன்மை அறிக்கை (Finance Viability) தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம் (TNUIFSL) மூலம் கணக்கிடப்பட்டு பின்வருமாறு இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசால் மான்யம் வழங்கப்பட உள்ளது.

1. **திட்ட மதிப்பீடு ரூ.297.25 கோடி**
2. **இயக்குதல் மற்றும் பராமரிப்பு – ரூ.540.33 இலட்சம் (ஒரு ஆண்டிற்கு**

3. நிதி நிலைப்புதன்மை (இணைப்புகள், வைப்புத் தொகை மற்றும் கட்டணம்)

| விபரம் | ஏற்கனவே உள்ள இணைப்பு (Existing) | | | புதிதாக வழங்கப்படவுள்ள இணைப்புகளுக்கு (Additional) | | |
|---|---|---|---|---|---|---|
| இணைப்புகள் (எண்ணிக்கை) | -- | -- | -- | 28852 | 5210 | |
| வைப்பு தொகை ரூ | -- | -- | -- | 6109 | 11702 | |
| வரிவிதிப்பு (ரூ. மாதத்தில்) | -- | -- | -- | 89 | 234 | |

இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை அவர்களது கடித எண் TNUDF/Projects/Aruppukottai UGSS நாள் 28.08.2023 ம் தேதிய கடிதத்தில் ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் TNUDF/KFW Assisted SMIF-TN-III மூலம் பாதாள சாக்கடை வடிகால் திட்டம் செயல்படுத்துவதற்கு பின்வரும் நிதி இயலுமைத் தன்மை மற்றும் கட்டணங்களை நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் TNUDF/ KFW Assisted SMIF-TN-III மூலம் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த நிதி இயலுமை அறிக்கை (Finance Viability Report) மற்றும் நிதி ஆதாரம் ஆகியவை கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>அ) நிதி ஆதாரம்</u>

| Sl.No. | Means of Finance | Amount (Rs. in Crores) | Percentage |
|---|---|---|---|
| 1 | Grant from GoI and GoTN under SBM 2.0 | 42.94 | 14.45% |
| 2 | CGF Grant | 59.04 | 19.86% |
| 3 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under KFW assisted SMIF-TN-III | 65.40 | 22.00% |
| 4 | Grant from Project Sustainability Grant Fund (PSGF) under KFW assisted SMIF-TN-III | 122.65 | 41.26% |
| 5 | ULB Contribution | 7.22 | 2.43% |
| | Total | 297.25 | 100.00% |

<u>(b) நிதி நிலைப்பு தன்மை Deposit and Tariff Structure</u> :

| Plinth Area of Assessment in Sq.ft | Proposed Deposit (Rs.) | | Proposed Tariff (Rs./month) | |
|---|---|---|---|---|
| | Domestic | Non-Domestic | Domestic | Non-Domestic |
| <=600 | 7500 | 15000 | 100 | 300 |
| 601-1200 | 10000 | 20000 | 120 | 360 |
| 1201-1800 | 12500 | 25000 | 140 | 420 |
| 1801-2400* | 15000* | 30000* | 160* | 480* |

| | | | | |
|---|---|---|---|---|
| Wt.Average | 8539 | 16702 | 108 | 320 |
| This is the base rate for the plinth area of 2400sq.ft The deposit and tariff for plinth area above 2400 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. | | | | |

ii) திட்ட மதிப்பீட்டில் 2.43% தொகையானது நகராட்சி பங்களிப்பாக ரூ.7.22 கோடி திட்ட பணிகளின் கட்டுமான பணிகள் நடைபெறும் காலத்தில் நகராட்சி பங்களிப்பு செலுத்தப்படவேண்டும்

iii) ஒவ்வொரு 5 வருடத்திற்கும் 10% வைப்புத்தொகை கட்டணம் மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு மாதக்கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்படவேண்டும்.

iv) திட்ட பணி கட்டுமானம் நடைபெறும்போது நகராட்சி பொது நிதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்படவேண்டும்.

v) இயக்குதல் மற்றும் பராமரித்தல் மற்றும் கடன் தொகை செலுத்த பற்றாக்குறை ஏற்படும் பொழுது அதனை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்தப்பட வேண்டும்.

இதனைத்தொடர்ந்து தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை அவர்களது கடித எண் TNUDF/Projects/Aruppukottai UGSS Dt.28.08.2023 ம் தேதிய கடிதத்தில் TNUDF/KFW திட்டத்தின் மூலம் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு அனுமதி பெறுவதற்கும், பரிந்துறை செய்வதற்கும், அரசின் நிர்வாக அனுமதி பெறுவதற்கும், இத்திட்ட பணிக்கு கடன் உதவி பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு :-</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி திட்ட பணிகள் மேற்கொள்வதற்காக ஏற்படுத்தபடவிருக்கும் அனைத்து ஒப்பந்தப் பத்திரத்திலும் நகராட்சி ஆணையர் ஒப்பம் செய்வதற்கான முழு உரிமை வழங்கிட அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.7476/2017/இ1

**தீர்மான எண்: 730**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்**22 : இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 30 திருச்சுழி மெயின் ரோடு அண்ணாசிலை பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான பொது கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் வசதிகள் இல்லை. இப்பகுதியில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடமாக இருப்பதால் பொதுகழிப்பறை, சிறுநீர் கழிப்பிட வசதிகள் செய்துதருமாறு நகர்மன்ற தலைவர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளதன் அடிப்படையில் மேற்படி இடம் தள ஆய்வு செய்யப்பட்டது. இப்பகுதியில் போதுமான இடவசதி இல்லததால் சிறிய அளவில் Bio Toilet Mechanism முறையில் பெண்களுக்கு கழிப்பிட வசதி 1 எண்ணம், ஆண்களுக்கு 2 எண்ணம் சிறுநீர் கழிப்பிடவசதியும் மற்றும் 1 எண்ணம் Kisok box முறையில் Coffee Shop அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.30.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

**மன்றம் அனுமதிக்கலாம்.** **ந.க.எண்**.4727/2023/இ1

**தீர்மான எண்: 731**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்23 : அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தார்சாலைகள், குறுகலான தெருக்களில் உள்ள சிறு சிறு குழிகள் மற்றும் பள்ளங்கள் அடிக்கடி குடிநீர் பணிகள் சீரமைப்பு பணிகள் செய்யும் போது ஏற்படுவதால் பொது மக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. இதனை உடன் சரிசெய்து தரும்படி நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உடன் இச்சாலைகளை சரிசெய்வது அவசியமாகும். எனவே நகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகளை சரிசெய்வதற்கு Cold Asphalt Bitumen (Ready made bitumen concrete) வாங்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.96 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4728 /2023/இ1

தீர்மான எண்: 732

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்24 :இந்நகராட்சி பகுதியில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளை சரிசெய்யும் பொழுது ஏற்படும் மேடு பள்ளங்களை சரிசெய்வதற்கு 20 எம்.எம் IRC மெட்டல் விநியோகம் செய்தல் மற்றும் சாலைகளை சரிசெய்வதற்கு Bitimen Gold Asphalt யை கொண்டு நிரப்புவதற்கும் அதனை சரிசெய்ய Labour charges & filling material சேர்த்து உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.3.29 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4729/2023/இ1

தீர்மான எண்: 733

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்25 :இந்நகராட்சி வார்டு எண் 19 டெலிபோன் ரோடு சிங்காரத்தோப்பு பகுதியில் பொது கழிவறை வசதிகள் இல்லாததால் இப்பகுதியில் பொது கழிவறை அமைத்துக் கொடுக்குமாறு நகர்மன்ற தலைவர் அவர்கள் அறிவுறை வழங்கியதன் அடிப்படையில் மேற்படி இடம் தள ஆய்வு செய்யப்பட்டதன்படி சிங்காரதோப்பு பகுதியில் நவீன முறையில் Bio Toilet 4 எண்ணம் பெண்களுக்கான கழிவைறை அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.30.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4730/2023/இ1

தீர்மான எண்: 734

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்26: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 32ல் பட்டாபிராமர் கோவில் தெருவில் உள்ள கழிவறையை பராமரிப்பு பணி மற்றும் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு தற்காலிக மின்இணைப்பு வழங்கக்கோரி 27.07.2023 அன்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் தற்காலிக மின்இணைப்பு வழங்குவதற்கு ரூ.1,22,378/-யை தமிநாடு மின்சார வாரியத்திற்கு

செலுத்தக்கோரி கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட தொகையை வருவாய் நிதியின் கீழ் மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4730/2023/இ1

தீர்மான எண்: 735

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்27: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 35ல் ராமசாமிபுரம் கிழக்கு பகுதியில் உள்ள கழிவறையை பராமரிப்பு பணி மற்றும் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு தற்காலிக மின்இணைப்பு வழங்கக்கோரி 09.08.2023 அன்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் தற்காலிக மின்இணைப்பு வழங்குவதற்கு ரூ.1,22,378/-யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தக்கோரி கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட தொகையை வருவாய் நிதியின் கீழ் மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4476/2023/இ2

தீர்மான எண்: 736

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்28: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் அமைந்துள்ள குடிநீர் பகிர்மான பிரதான குழாய் மற்றும் திருப்புவனம் தலைமை நீரேற்று நிலையம் முதல் அருப்புக்கோட்டை நகராட்சி எல்லை வரை உள்ள உந்து குழாய் மற்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள வால்வுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.60 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4384/2023/இ1

தீர்மான எண்: 737

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்29:அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் செயல்பாட்டில் இருக்கும் அடிகுழாய்களை வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்வது அவசியமாகும். குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி உடன் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.8.00 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4383/2023/இ1

தீர்மான எண்: 738

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**(ஓம்) திருமதி.சி.சுந்தரலட்சுமி**

**நகர்மன்ற தலைவர்**

**அருப்புக்கோட்டை நகராட்சி**

**ஆணையாளர்**

**அருப்புக்கோட்டை நகராட்சி**